தேங்காய் அறுவடைக்கு ஏற்ற தருணம்

First Published : 19 Aug 2010 12:00:00 AM IST



விழுப்புரம்: இந்திய அளவில் தேங்காய் பயிரிடுவதில் தமிழ்நாடு சற்று குறைவாக உள்ள போதிலும் அதிக உற்பத்தித் திறன் காரணமாக இந்திய அளவில் தேங்காய் உற்பத்தியில் 34 சதவீதத்தை தமிழ்நாடு கொண்டுள்ளது.

÷இதில் கோவை, தஞ்சை, திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 80 சதவீதம் பங்கினை அளிக்கின்றன. வரும் மாதங்களில் தேங்காய் அறுவடை செய்தால் நல்ல விலை கிடைக்குமா, இல்லையா என தென்னை விவசாயிகள் சந்தேகங்களை எழுப்பியுள்ளனர்.

÷மொத்த உற்பத்தியில் 35 சதவீதம் மட்டுமே எண்ணெய் உபயோகத்துக்கு பயன்பட்டாலும் தேங்காய் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளை தேங்காய் எண்ணெயின் விலையைப் பொருத்தே உள்ளன. கடந்த ஆண்டில் உணவு எண்ணெய் சுமார் 80 லட்சம் டன்னுக்கு அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டதால், இந்திய அளவில் எண்ணெய் விலை தேக்கநிலை அல்லது குறைந்தபடி உள்ளது.

÷எண்ணெய் பிழிவோர் சங்கத்தின் ஆய்வின்படி 6.6 லட்சம் கொப்பரையும், 4.3 லட்சம் டன் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் என்றும் கணக்கீடு செய்துள்ளது. கடந்த ஆண்டைவிட 1.5 சதவீத அளவு இது அதிகமாக இருக்கும்.

÷தேங்காய் ஓட்டின் நிறம், எடை, அளவு மற்றும் அதைத் தட்டும்போது வரும் ஒலி இவற்றைக் கொண்டு தரம் நிர்ணயிக்கப்பட்டு விலை நிர்ணயிக்கப்படுகிறது. தரம் மற்றும் எண்ணெய் பிழிதிறன் அதிகமாக உள்ளதால் பொள்ளாச்சி பகுதிகளில் விளையும் தேங்காய் அதிக விலை பெறுகிறது. தேங்காயிலிருந்து 17 சதவீத அளவு கொப்பரையும், கொப்பரையிலிருந்து எண்ணெய் 60 - 65 சதவீதம் கிடைக்கிறது.

÷பிப்ரவரி முதல் ஜூன் வரை தேங்காய் வரத்து அதிகமாகவும், ஜூலை முதல் டிசம்பர் வரை வரத்து குறைவாகவும் இருக்கும். உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தின் ஆய்வு முடிவுகளின்படி தேங்காயின் விலை ஜூலை மாதத்துக்கு பிறகு அதிகரிக்கத் தொடங்கும்.

÷எனவே இந்த காலகட்டத்தில் தேங்காய் அறுவடை செய்தால் அதன் விலை நிலவரம் எப்படி இருக்கும் என்பது குறித்து வேளாண் வணிக துணை இயக்குநர் (பொறுப்பு) என். தனவேல் கூறியது:

÷இனி வர உள்ள பண்டிகை காலத் தேவைகளுக்கு பிகார், உத்தரப்பிரதேசம், ஆந்திரம், கேரளம் போன்ற மாநிலங்களிலுள்ள வர்த்தகர்கள் அதிக அளவு கொள்முதல் செய்வார்கள். பொள்ளாச்சிப் பகுதியில் தேங்காயின் பண்ணை விலை ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் ரூ.5 முதல் ரூ.5.50 ஆகவும், அக்டோபர், நவம்பர் மாதங்களில் ரூ.5.50 முதல் ரூ.6 வரையும் இருக்கும் என ஆய்வு முடிகள் தெரிவிக்கின்றன.

÷தமிழகத்தின் இதர சந்தைகளில் விலை சற்றுக் குறைவாகவே இருக்கும். விவசாயிகள் மேற்கூறிய விலை முன்னறிவிப்பினைக் கருத்தில் கொண்டு தங்கள் அறுவடையைத் திட்டமிடலாம் என்றார்.

**விதை நெல் பாதுகாப்புக்கு புதிய ஏற்பாடு**

First Published : 18 Aug 2010 11:44:50 PM IST



விதை நெல் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ள தகரப் பத்தையம்.

சிதம்பரம்: பாரம்பரிய நெல் மற்றும் சிறு தானியங்களை பாதுகாக்க புதிய வகை தகரப் பத்தையம் தற்போது வேளாண் இடுபொருள் சந்தைகளில் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு அதிகப்படியாக விற்பனை செய்யப்படுகிறது.

÷இதுகுறித்து அண்ணாமலைப் பல்கலை வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது: பாரம்பரிய மரப் பத்தையங்களுக்கு மாற்றாகவும், குறைந்த செலவில் விதை நெல் மற்றும் தானியங்களை பாதுகாக்கும் வகையிலும் இந்த புதிய வகை தகரப் பத்தையம் தற்போது வேளாண் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளது. இப்புதிய தானிய சேமிப்பு முறையில் மரப் பத்தையம் அல்லது மரக் களஞ்சியத்துக்கு மாற்றாக சிறிய அளவு வடிவமைப்பில் இந்த தகரப் பத்தையம் உருவாக்கப்பட்டுள்ளது.

÷புதிய வகை தகரப் பத்தையத்தில் விவசாயிகள் அறுவடைக் காலம் முடிந்த பின் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இல்லாத நன்றாக முதிர்ந்த தானியங்களை சேகரித்து சுத்தப்படுத்தி, நன்றாக காய வைத்து பின்பு வேப்ப இலை, நொச்சி இலைகள் கலந்து தகரப் பத்தையத்தில் சேகரித்து வைக்கலாம்.

பின்னர் மாதம் ஒருமுறை சேமிப்பு பூச்சிகள் தாக்குதல் பற்றி கண்காணிப்புப் பணிகளை தகரப் பத்தையத்தின் உள்ளேயும், வெளியேயும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். நிலத்திலிருந்து அல்லது தரையிலிருந்து ஒரு அடி உயரத்துக்கு மண் தொடர்பு இல்லாதவாறு தகரப் பத்தையத்தை வைத்துக்கொள்ள வேண்டும்.

தகரப் பத்தையத்துக்கு கீழே உள்ள திறப்பு வழியாக தானியங்களை எளிதாக எடுத்து சோதித்து அறிந்து மீண்டும் தகரப் பத்தையத்தின் மேல் பகுதியின் வழியாக உள்ளே போடலாம். குறைந்த அளவு வடிவமைப்பில் செய்யப்பட்டுள்ள இந்த தகரப் பத்தையம் குடியிருப்பு பகுதியில் இடத்தை அடைக்காது. குறைந்தச் செலவில் அதிக காலத்துக்கு சிறு மற்றும் குறு விவசாயிகள் உணவு தானியங்களை எளிதாக பாதுகாத்து நெடுங்காலத்துக்கு தொடர்ச்சியாக சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் விவசாயிகளிடம் உள்ள பூச்சி மற்றும் நோய் தாக்குதலை எதிர்கொள்ளும் பாரம்பரிய நீண்ட ரக விதைகள், வட்டார அளவிலான நாட்டு ரக விதைகள், மருத்துவ குணம் கொண்ட உணவு தானிய ரகங்கள் ஆகியவற்றை தகரப் பத்தையத்தின் மூலம் எளிதாக பாதுகாக்க முடியும். எனவே தமிழக விவசாயிகள் குறைந்த செலவிலான இந்த புதிய வகை தகரப் பத்தையத்தை பயன்படுத்தி பயன் பெறலாமே.

**சின்ன வெங்காயம் - பெரிய லாபம்: வேளாண் துறை ஆலோசனை**

First Published : 19 Aug 2010 12:00:00 AM IST



கடலூர்: தற்போது விவசாயிகள் சின்ன வெங்காயத்தை பயிரிட்டால் அதிக லாபம் பெறலாம் என்று வேளாண் துறை பரிந்துரை செய்து உள்ளது.

÷இந்தியாவின் முக்கிய காய்கறிகளில் சின்ன மற்றும் பெரிய வெங்காயம் முக்கிய இடத்தை வகிக்கிறது. நாட்டின் மொத்த காய்கறி உற்பத்தியில் வெங்காயம் 10.5 சதவீதம்.

÷தமிழ்நாட்டில் 35 ஆயிரம் ஹெக்டேரில் 3.05 லட்சம் டன் வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 75 சதவீதம் சின்ன வெங்காயம். கடலூர் மாவட்டத்தில் நாணமேடு, சுபஉப்பளவாடி, கண்டக்காடு, சிறுபாக்கம், எஸ்.நாரையூர், ரெட்டாக்குறிச்சி, எஸ்.புதூர் ஆகிய கிராமங்களில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது.

÷சின்ன வெங்காயம் பயிரிடும் விவசாயிகளுக்கு உதவும் வகையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் தகவல் மையம், கடந்த 10 ஆண்டுகளில் சின்ன வெங்காயத்தின் விலை நிலவரத்தை ஆய்வு செய்ததன் அடிப்படையில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் நா.தனவேல், கீழ்காணும் பரிந்துரைகளை விவசாயிகளுக்கு அளித்து உள்ளார். அந்த விவரம்:

÷ஏப்ரல், மே, ஜூன், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் கர்நாடக மாநிலத்தில் இருந்து தமிழகத்துக்கு வெங்காய வரத்து அதிகம் இருக்கும். இதனால் தமிழகத்தில் உற்பத்தியாகும் வெங்காயத்தின் விலை, கர்நாடக வெங்காய வரவால் பாதிக்கும். எனவே தமிழக வெங்காய விவசாயிகள் அக்டோபர், நவம்பர் மாதங்களில் அறுவடை செய்யும் வகையில், தற்போது வெங்காய விதைப்பை மேற்கொள்ளலாம்.

÷அக்டோபர், நவம்பர் மாதங்களில் இங்கு விலை ஏறுமுகத்தில் இருக்கும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதி சந்தை தகவல் மைய ஆய்வு முடிவுகளின்படி, தரமான வெங்காயத்தின் விலை வரும் அக்டோபர் முதல் நவம்பர் வரை கிலோவுக்கு |13 முதல் |16 வரை இருக்கும். சுமாரான வெங்காயம் கிலோ |10 முதல் |13 வரை இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

÷எனவே விவசாயிகள் தற்போது வெங்காயம் பயிரிடலாம். விதை மூலம் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தை விதைத்தால் பயிர் செலவு குறையும். ஆனால் இந்த வெங்காயம் சேமிக்க உகந்ததல்ல என்றும் துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**காவிரி அணைகளின் நீர்மட்டம்**

First Published : 18 Aug 2010 10:45:12 PM IST

மைசூர் கேஆர்எஸ் அணை நீர்மட்டம்

மொத்த உயரம்: 124.80 அடி

புதன்கிழமை நீர்மட்டம்: 1 09.08 அடி

அணைக்கு நீர்வரத்து: 6,208 கன அடி

வெளியேற்றப்படும் நீர்: 5,153 கன அடி.

கபினி அணை நீர்மட்டம்

மொத்த உயரம்: 2,284 அடி

(கடல்மட்ட அளவு)

புதன்கிழமை நீர்மட்டம்: 2,282.43 அடி

அணைக்கு நீர்வரத்து: 4,313 கன அடி

வெளியேற்றப்படும் நீர்: 2,700 கனஅடி

**பி.டி. பருத்தியில் அதிக மகசூல் பெற ஆலோசனை**

First Published : 18 Aug 2010 12:13:27 PM IST

Last Updated : 18 Aug 2010 12:28:26 PM IST

பெரம்பலூர், ஆக. 17: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் பி.டி. பருத்தியில் அதிக மகசூல் பெற வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

களைக் கொல்லிகள் என்பவை, களைச் செடிகளை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு வேதியியல் பொருளாகும். இதை முளைப்பதற்கு முன்பு, களைச்செடி வளர்ந்த பின்பு என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். முளைக்கும் முன்பு செயல்படும் களைக் கொல்லிகள் களை விதை முளைக்கும் போதே, அதன் முளை வேர்கள் வழியே உள்சென்று அவற்றை அழிக்கின்றன. இவ் வகை களைக் கொல்லிகளைப் பயன்படுத்தும் போது, மண்ணில் போதுமான ஈரப்பதம் அவசியம். இந்தக் களைக் கொல்லிகள் குருணையாக இருந்தால், அதைச் சீராகப் பரப்புவதற்கு மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். தூவப்பட்ட இடங்களை நீரில் மிதக்காமல் தவிர்க்க வேண்டும்.

களைச் செடிகள் முளைத்து வளர்ந்த பின்பு தெளிக்கப்படும் களைக் கொல்லிகள் இலைகள் மூலம் உறிஞ்சப்பட்டு, மற்ற பாகங்களுக்கு ஊடுருவிச் சென்று, களைகளை கொல்கின்றன. இந்சச் செடிகள் முளைப்பதற்கு முன்பு தெளிப்பதாக இருந்தால், ஹெக்டேருக்கு 3.50 லிட்டர் பென்டமெத்தலின் (ஸ்டாம்பு) அல்லது அளாக்குளோர் 2.50 லிட்டர் அல்லது டையூரான் 1.25 லிட்டர் உள்ளிட்டவற்றில் ஏதாவது ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பருத்தி விதைத்த மூன்றிலிருந்து, ஐந்து நாள்களுக்குள் கைத் தெளிப்பான் மூலம் தெளித்தல் அவசியம்.

தெளித்தப்பின்பு தெளிப்பானை நன்றாகக் கழுவ வேண்டும். தண்ணீரை மட்டும் நிரப்பி ஒரு டேங்க் தரிசாக உள்ள நிலங்களில் அடிப்பதால் தெளிப்பான் உள்பகுதியில் உள்ள களைக் கொல்லி நஞ்சை சுத்தமாக நீக்கலாம். இல்லையெனில், பிறகு மருந்து கலந்து அடிக்கும்போது, களைக் கொல்லியின் மீதமுள்ள நஞ்சினால் பயிர்க் கருகுவதைத் தவிர்க்கலாம்.

களைச் செடி வளர்ந்த பிறகு தெளிப்பான் இருந்தால், பாராக்குவாட் அல்லது டைக்குவாட் என்னும் களைக் கொல்லியைப் பயன்படுத்தி, களைகளை கட்டுப்படுத்தலாம்.

குறிப்பாக, களைக் கொல்லிகளைப் பயன்படுத்தும் போது, பருத்தியில் ஊடு பயிராக பயறு வகைகள் இருந்தால், பென்டமெத்தலின் ஸ்டாம்பு உபயோகிப்பதை தவிர்ப்பதோடு, களைகளை அழிக்க களை எடுக்கும் கருவியை பயன்படுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் பி.டி. பருத்தியில் அதிக மகசூல் பெறலாம் என்றார் அவர்.

**ஏக்கருக்கு ரூ. 11,000 பயிர்க் கடன் வழங்க மார்க்சிஸ்ட் கோரிக்கை**

First Published : 18 Aug 2010 12:17:13 PM IST

Last Updated : 18 Aug 2010 12:28:05 PM IST

திருவாரூர், ஆக. 17: காவிரிப் பாசன விவசாயிகளுக்கு சம்பா சாகுபடி மேற்கொள்ள ஏக்கருக்கு ரூ. 11,000 பயிர்க் கடன் வழங்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

திருவாரூரில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மத்திய, மாநில அரசுகளின் விவசாயிகள் விரோதக் கொள்கை குறிப்பாக தமிழக அரசின் காவிரி நீர் அணுகுமுறை விவசாயிகளின் நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

இதன் விளைவாக காவிரிப் பாசனத்தை நம்பி சாகுபடி செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. குறுவை சாகுபடி இல்லாதநிலையில், , சம்பா சாகுபடியையாவது காப்பாற்ற தமிழக அரசு கூடுதல் அக்கறை எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும். கடைமடை பகுதி வரை தண்ணீர் சென்றடைய மேட்டூர் அணையிலிருந்து 14,000 கன அடி தண்ணீரை உடன் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சம்பா சாகுபடிக்கேற்ற நெல் ரகங்களை வேளாண் துறையின் மூலம் வழங்க வேண்டும். எவ்வித நிபந்தனையுமின்றி விவசாயக் கடனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு மாவட்டக் குழு உறுப்பினர் ஜெ. நாவலன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் ஐ.வி. நாகராஜன் முன்னிலை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் ஏ. லாசர் அரசியல் நிலவரம் குறித்துப் பேசினார்.

மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கே. ரங்கசாமி, ஜி. சுந்தரமூர்த்தி, நா. பாலசுப்பிரமணியன், எஸ். சேகர் மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**20-ல் கடலூரில் விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம்**

First Published : 18 Aug 2010 10:12:53 AM IST

கடலூர், ஆக. 17: கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 20) காலை 10-30 மணிக்கு நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் அறிவித்து உள்ளார்.

ஆட்சியர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள் வேளாண்மை சார்ந்த கோரிக்கைகளை முன்வைக்க அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும். கோரிக்கைகளை மனுவாகவும் அளிக்கலாம். கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அதிகாரிகள் உரிய

பதில் அளிக்கவும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கவும் மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டு உள்ளது என்று செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**காமன்தொட்டியில் 200 ஏக்கரில் ரூ50 கோடியில் காய்கறி மொத்த விற்பனை அங்காடி**

First Published : 18 Aug 2010 11:23:14 AM IST

ஒசூர், ஆக. 17: ஒசூர் அருகேயுள்ள காமன்தொட்டியில் புதிய காய்கறி மொத்த விற்பனை அங்காடி புதியதாக அமைக்கப்பட உள்ளது. 200 ஏக்கரில் ரூ50 கோடி மதிப்பில் இந்த அங்காடி அமைக்கப்பட்டு வருகிறது.

ஒசூரில் ஆண்டு முழுவதும் நிலவும் குளிர்ந்த சூழ்நிலையால், சுமார் 1000 ஏக்கர் நிலப் பரப்பில் காய்கறிகளை விவசாயிகள் பயிர் செய்துவருகின்றனர்.

இவை ஒசூர் உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. 1,000-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில் உள்ள உணவகங்களுக்கு இங்கு காய்கறிகள் வாங்கிச் செல்லப்படுவதால், நாள்தோறும் 100 முதல் 150 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், விவசாயிகள் பத்தளப்பள்ளி காய்கறி மொத்த அங்காடியிலும் காய்கறிகளை விற்பனை செய்கின்றனர். இங்கிருந்து வெளிமாநிலங்களுக்கு நாள்தோறும் சுமார் 80 முதல் 100 லாரிகள் மூலம் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஒசூர் ராயக்கோட்டை சாலையில் எம்.ஜி.ஆர். மார்கெட்டில் மொத்த காய்கறி விற்பனை அங்காடி 2004 வரை செயல்பட்டு வந்தது. பின்னர் பேரண்டப்பள்ளி ஊராட்சியில் உள்ள பத்தளப்பள்ளிக்கு மாற்றப்பட்டது. இங்கு 100-க்கும் மேற்பட்ட கடைகளில் காய்கறி வியாபாரம் நடைபெற்று வருகிறது. இடநெருக்கடியால் புதிய அங்காடி

இந்நிலையில், பத்தளப்பள்ளி மொத்த காய்கறி விற்பனை அங்காடி இட நெருக்கடியில் சிக்கியுள்ளது. இந்த மார்கெட்டையொட்டி, 6 வழிச் சாலை அமையவுள்ளதால், விரிவாக்கம் செய்ய முடியாத நிலையுள்ளது. எனவே மற்றொரு மொத்த காய்கறி விற்பனை அங்காடியை காமன்தொட்டியில் அமைக்க ஒசூர் காய்கறி மொத்த வியாபாரிகள் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து சங்கத் தலைவர் ராஜாரெட்டி கூறியது:

ஒசூர் பத்தளப்பள்ளியில் உள்ள காய்கறி அங்காடி தொடர்ந்து செயல்படும். மேலும், காமன்தொட்டியில் சுமார் 200 ஏக்கரில் சுமார் ரூ50 கோடி மதிப்பில் புதிய மொத்த விற்பனை அங்காடி அமைக்கப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான நிலம் தேர்வு செய்யும் பணி முடிவடைந்து, கடைகள் கட்டும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. 100-க்கும் மேற்பட்ட லாரிகள் உள்ளே வந்து செல்லும் வகையில் புதிய அங்காடி அமைக்கப்படவுள்ளது. இங்கு சுமார் 200 கடைகள் திறக்கபடவுள்ளன என்றார்.

**ஏக்கருக்கு ரூ. 11,000 பயிர்க் கடன் வழங்க மார்க்சிஸ்ட் கோரிக்கை**

First Published : 18 Aug 2010 12:17:13 PM IST

Last Updated : 18 Aug 2010 12:28:05 PM IST

திருவாரூர், ஆக. 17: காவிரிப் பாசன விவசாயிகளுக்கு சம்பா சாகுபடி மேற்கொள்ள ஏக்கருக்கு ரூ. 11,000 பயிர்க் கடன் வழங்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

திருவாரூரில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மத்திய, மாநில அரசுகளின் விவசாயிகள் விரோதக் கொள்கை குறிப்பாக தமிழக அரசின் காவிரி நீர் அணுகுமுறை விவசாயிகளின் நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.
இதன் விளைவாக காவிரிப் பாசனத்தை நம்பி சாகுபடி செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. குறுவை சாகுபடி இல்லாதநிலையில், , சம்பா சாகுபடியையாவது காப்பாற்ற தமிழக அரசு கூடுதல் அக்கறை எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும். கடைமடை பகுதி வரை தண்ணீர் சென்றடைய மேட்டூர் அணையிலிருந்து 14,000 கன அடி தண்ணீரை உடன் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சம்பா சாகுபடிக்கேற்ற நெல் ரகங்களை வேளாண் துறையின் மூலம் வழங்க வேண்டும். எவ்வித நிபந்தனையுமின்றி விவசாயக் கடனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்துக்கு மாவட்டக் குழு உறுப்பினர் ஜெ. நாவலன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் ஐ.வி. நாகராஜன் முன்னிலை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் ஏ. லாசர் அரசியல் நிலவரம் குறித்துப் பேசினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கே. ரங்கசாமி, ஜி. சுந்தரமூர்த்தி, நா. பாலசுப்பிரமணியன், எஸ். சேகர் மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

தினமலர்

**தஞ்சையில் தென்னை வாரிய அலுவலகம்?**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2010,03:26 IST

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டையில் தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்க இரண்டாவது மாநில மாநாடில் மாவட்ட தென்னை அமைப்பாளர் பாலசுந்தரம் வரவேற்றார்.
முத்துப்பேட்டை யூனியன் தலைவர் கல்யாணசுந்தரம் கொடியேற்றினார். மாநில தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்.ஜூன் 12ல் மேட்டூரில் தண்ணீர் திறக்காததால் காவிரி பாசன பகுதியில் குறுவை சாகுபடி செய்ய முடியாமல் போனது. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் படி

கர்நாடகாவில் இருந்து தண்ணீர் பெற்றுத்தர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். உரித்த தேங்காய் கிலோ ஒன்றுக்கு 17 ரூபாய் வழங்க வேண்டும்.கொப்பரை கிலோ ஒன்றுக்கு 55 ரூபாய் வழங்க வேண்டும். கொள்முதல் செய்த தொகையை தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அடையாள அட்டை பெறுவதில் உள்ள சிரமத்தை சரிசெய்ய வேண்டும். தஞ்சையில் செயல்பட்டு வந்த தென்னை வளர்ச்சி வாரிய அலுவலகத்தை விவசாயிகளின் கருத்தை கேட்காமல் சென்னைக்கு மாற்றி சென்னையில் செயல்பட்டுவரும் தென்னை வளர்ச்சி வாரிய அலுவலகத்தை தென்னை அதிகம் விளையக்கூடிய தஞ்சாவூர் அல்லது கோவைக்கு மாற்ற வேண்டும்.தென்னையின் அனைத்து பாகங்களும் பயன்தரக் கூடியதால் தென்னை துணைப்பொருட்கள் உற்பத்தி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். காப்பீட்டு திட்டத்தில் இழப்பில் 20 சதவீதம் விவசாயிகளை சேரும் என்பதை திருத்தம் செய்ய வேண்டும்.நான்கு முதல் 15 வயதுள்ள தென்னை மரங்களுக்கு காப்பீட்டு தொகையான 600 ரூபாயை ஆயிரத்து 500 ரூபாயாக அறிவிக்க வேண்டும். 16 முதல் 60 வயது வரை உள்ள மரங்களுக்கு உள்ள காப்பீட்டு தொகை ஆயிரத்து 150 ரூபாய் என்பதை இரண்டாயிரம் ரூபாயாக மாற்ற வேண்டும். ஒவ்வொரு நாளும் 16 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். வெளிநாடுகளில் இருந்து தென்னை பொருட்களை இறக்குமதி செய்வதை தடைசெய்ய வேண்டும். தென்னை விவசாயிகளுக்கு 4 சதவீத வட்டியில் 10 ஆயிரம் ரூபாய் வீதம் நீண்ட கால கடன் வழங்க வேண்டும்.தேங்காய் பறிக்கும் இயந்திரத்தை மாநிய விலையில் வழங்க வேண்டும். மேற்கூறிய கோரிக்கைகளை வலியுறுத்தி செப்டம்பர் மாதம் மாநிலம் தழுவிய அளவில் போராட்டம் நடத்தவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.மாநில ஒருங்கிணைப்பாளர் துரைமாணிக்கம், அகில இந்திய தென்னை உற்பத்தியாளர் சங்க கேரள மாநில செயலாளர் சசாங்கன், எம்.எல்.ஏ., குணசேகரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**நிலக்கடலை சாகுபடி குறைய வாய்ப்பு இல்லை : துணை இயக்குனர் நம்பிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2010,03:19 IST

நாமக்கல்: "இந்திய அளவில் 15 முதல் 20 சதவீதம் வரை நிலக்கடலை சாகுபடிப் பரப்பு குறையும் என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் நிலக்கடலை சாகுபடி பரப்பு குறைய வாய்ப்பில்லை' என, மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கையில், முக்கிய எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலை, குஜராத்தில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது, இங்கு நிலக்கடலை சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. கடந்த ஆண்டு கரீப் பருவத்தில், இந்தியாவில் 52.89 லட்சம் ஹெக்டேரில் நிலக்கடலை பயிரிடப்பட்டது. குஜராத்தில் மட்டும் 18 லட்சம் ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது.இந்தாண்டு கரீப் பருவத்தில் இந்திய அளவில் 15முதல் 20 சதவீதம் வரை நிலக்கடலை சாகுபடி பரப்பு குறையும் என கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை சாகுபடி பரப்பு குறைய வாய்ப்பில்லை. மேலும், உற்பத்தி திறனும்

நன்றாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. அதிகமான எண்ணெய் இறக்குமதி இருக்கும் போதிலும் 10 லட்சம் மெட்ரிக் டன் நிலக்கடலை உணவு பொருளுக்கு தேவைப்படுகிறது. விழாக்காலங்களில் தேவை அதிகரிப்பு, தற்போதுள்ள குறைவான நிலக்கடலை கையிருப்பு ஆகிய காரணங்களால், நிலக்கடலை விலை செப்டம்பர் முதல் டிசம்பர் 2010 வரை குவிண்டாலுக்கு 2,900 ரூபாய் முதல் 3,200 ரூபாய் வரை இருக்கும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இயற்கை வேளாண் கருத்தரங்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2010,03:17 IST

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், நாளை 20ம் தேதி இயற்கை வேளாண்மை குறித்த கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நடக்கிறது.
இதுகுறித்து திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்தாவது:கருத்தரங்கின் முதல் அமர்வில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், இயற்கை வேளாண்மை குறித்த அனுபவங்களை விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்கிறார். மண்ணின் தன்மை, மண்வள மேம்பாடு, மண் பரிசோதனை, கால்நடை கழிவுகளை உரமாக்கும் தொழில்நுட்பம், இயற்கை உரங்களின் தன்மை, அவற்றை பயன்படுத்தி மண்வளத்தை மேம்படுத்துவதற்கான முறை குறித்து விவாதிக்கப்பட உள்ளது.இரண்டாவது அமர்வில் நெல், கரும்பு, பருத்தி, காய்கறி, வாழை, மஞ்சள், பாக்கு மற்றும் கோகோ பயிர்கள் இயற்கை முறையிலான சாகுபடி தொழில்நுட்பம், பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் முறை குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட உள்ளது. துல்லிய பண்ணை முறையில் பயிர்கள் சாகுபடி குறித்தும் விளக்கப்பட உள்ளது.

மூன்றாம் அமர்வில் இயற்கை வேளாண் சான்று பெறுவதற்கான வழிமுறை, உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தையில் விற்பனைக்கான வாய்ப்புகள் குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது. இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் நிறுவனங்கள், விவசாயிகள், ஆய்வு நிறுவனங்கள் கண்காட்சியில் பங்கேற்க உள்ளன. இயற்கை வேளாண்மைக்கு பயன்படும் பல்வேறு வகை இடுபொருட்கள், இயற்கை வேளாண்மை மூலம் விளைவிக்கப்பட்ட பயிர்கள் ஆகியவை கண்காட்சியில் இடம்பெறும்.கண்காட்சியில், இயற்கை வேளாண் உற்பத்திப் பொருட்களை வாங்குவோர் மற்றும் விற்போர் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பண்ணையாளர், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள விவசாயிகள் பங்கேற்கலாம்.பங்கேற்க விரும்புவோர், 04286-266345, 266244 ஆகிய ஃபோன்ற எண்களில் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்யலாம். கண்காட்சியில் இயற்கை வேளாண் இடுபொருட்கள், உற்பத்தி பொருட்கள் ஆகியவற்றை வைக்க விரும்பும் விசாயிகள், நிறுவனத்தார் வேளாண் அறிவியல் நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**அக்டோபரில் கரும்பு அரவைகரும்பு பயிரிடுவோர் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2010,03:16 IST

மோகனூர்: "மோகனூர் சர்க்கரை ஆலையில், அக்டோபர் மாதத்தில் கரும்பு அரவையை துவக்க வேண்டும்' என, கரும்பு பயிரிடுவோர் சங்கத் தலைவர் கருப்பண்ணன், செயலாளர் அஜிதன் ஆகியோர் சர்க்கரைத்துறை ஆணையருக்கு மனு அனுப்பி உள்ளனர்.அந்த மனுவில் கூறியிருப்பதாவது:மோகனூர் சர்க்கரை ஆலைக்கு 2010-11ம் ஆண்டுக்கான அரவை பருவத்துக்கு பதிவு செய்துள்ள கரும்பின் அளவு கடந்த ஆண்டைவிட குறைவு. அதற்கு, கரும்புக்கு கிடைக்கக் கூடிய கொள்முதல் விலை போதிய அளவு இல்லாததும், நாமக்கல் மாவட்டத்தில் போதிய மழை பெய்யாததும் காரணம். நீர்பற்றாக்குறையும், அதிக பகல் நேர வெப்பம்,

இடைக்கணு புழு தாக்குதல் காரணமாக விளைச்சலில் பாதிப்பு ஏற்படும் சூழல் உள்ளது.மோகனூர் சர்க்கரை ஆலையை சுற்றி உள்ள புகளூர், பள்ளிபாளையம், பெட்டவாய்த்தலை மற்றும் பெரம்பலூர் ஆகிய தனியார் ஆலைகளில் முன் கூட்டியே அரவை துவக்க திட்டமிட்டுள்ள நிலையில், மோகனூர் சர்க்கரை ஆலை அரவை பகுதியில் விவசாயிகள் சாகுபடி செய்து, பதிவாகாத கரும்பை தனியார் ஆலைக்கு வெட்டி அனுப்ப வாய்ப்பு உள்ளது.கரும்பின் அறுவடைக்கு முந்தைய முதிர்ச்சி குறித்து ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் அரவை பருவத்தை அக்டோர் மாதத்தில் துவங்க வேண்டும். ஆலை கோட்டப்பகுதியில் உள்ள கிராம சாலைகளை சீர்செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,23:28 IST

காரைக்குடி : விவசாய உதவி இயக்குனர் கண்ணன் கூறியதாவது:சாக்கோட்டை ஒன்றியத்தில் நீர், நிலவள திட்டத்தில் 2.75 ரூபாய் ஒதுக்கப்பட் டுள்ளது. இதில் செம்மை நெல் சாகுபடிக்கு மானியமாக, 10,780 ரூபாய்; திருந்திய செம்மை நெல் சாகுபடிக்கு 7,750; மக்காச் சோளம் செயல்விளக்க திடல் அமைக்க 4,000; மண் புழு உரம் தயாரிப்பிற்கு 5,000 ரூபாய் வழங்கப்படுகிறது. விருப்பமுள்ள விவசாயிகள், விவசாய உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம் என்றார். விவசாய அலுவலர் பிரியா பொன் காயத்திரி உடனிருந்தார்.

**நவீன சாகுபடி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,23:28 IST

சிவகங்கை,: விவசாயிகள், உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு நவீன விவசாய சாகுபடி முறைகள் பயிற்சி முகாம், சிவகங்கையில் நடந்தது.விவசாய இணை இயக்குனர் தங்கச்சாமி பாண்டியன் தலைமை வகித்தார். உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் தட்சிணாமூர்த்தி, கால்நடை உதவி இயக்குனர் சீனிவாசன், மண் பரிசோதனை நிலைய அலுவலர் ராஜா, விவசாய அலுவலர்

முத்துமீனா ஆலோசனை வழங்கினர். விவசாய உதவி இயக்குனர் தனபாலன் ஏற்பாடுகளை செய்தார். விவசாய அலுவலர் சரவணக்குமார் நன்றி கூறினார்.

**எகிறும் கடலை எண்ணெய் விலை இன்னும் உயரும்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,23:28 IST

சிவகங்கை: நிலக்கடலைக்கு தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதால், கடலை எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. கடந்த மூன்று மாதத்திற்கு முன் 64 ரூபாய் என இருந்த கடலை எண்ணெய், நேற்று 86 க்கு விற்கப்பட்டது.சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறி விலை நிலவரம் (கிலோ):கத்தரிக்காய்- 16; 10 க்கு விற்ற வெண்டைக்காய் -16; பாகற்காய்- 20; 32 க்கு விற்ற முருங்கை பீன்ஸ்- 30; கேரட்- 30; 10 க்கு விற்ற முள்ளங்கி- 20; 15 க்கு விற்ற உருளை கிழங்கு- 20; முட்டை கோஸ்- 15; 15 க்கு விற்ற தக்காளி-10; கருணை கிழங்கு- 50; 40 க்கு விற்ற இஞ்சி- 30; 24 க்கு விற்ற அவரைக்காய்- 30; பட்டர் பீன்ஸ்- 60; 18 க்குவிற்ற வெங்காயம்- 20; 18 க்கு விற்ற பெல்லாரி வெங்காயம்- 15; காலி பிளவர்- 20; சேணை கிழங்கு- 40; சேம்பு- 40; 16 க்கு விற்ற பச்சை மிளகாய்- 20; 16 க்கு விற்ற பீட்ரூட்- 15; 16 க்கு விற்ற நூக்கல் -30; 50 க்கு விற்ற சோயா பீன்ஸ்- 60; எலுமிச்சை- 30; பூசணி- 20; சீனி அவரை 10; 25 க்கு விற்ற மல்லித்தழை 15 ரூபாய்.ஆப்பிள் மலிவு: 100 க்கு விற்ற முதல் ரக ஆப்பிள்- 80; 80 க்கு விற்ற இரண்டாவது ரகம் 50; 80 க்கு விற்ற ஆரஞ்சு- 60; சப்போட்டா 12; 60 க்கு விற்ற வெள்ளை திராட்சை - 50; 35 க்கு விற்ற கறுப்பு திராட்சை -40; 15 க்கு விற்ற பேரிக்காய் 20; 25 க்கு விற்ற அன்னாசி பழம்- 20; மாதுளை- 60, இரண்டாவது ரகம்- 40 ரூபாய்.பஜாரில் மளிகை விலை: துவரம் பருப்பு-67; தட்ட பயறு- 48; கடலை பருப்பு- 36; உளுந்தம் பருப்பு- 78; கொண்ட கடலை- 36; பாசி பருப்பு- 80; பாசி பயறு- 72; மொச்சை பயறு- 46, வெள்ளை மொச்சை- 72; பட்டாணி- 24, வெள்ளை பட்டாணி- 28; மல்லி- 48; புளி- 54, நயம்- 56; வத்தல்- 67, இரண்டாவது ரகம்- 53; மலை பூண்டு-120, சாதா பூண்டு- 90, சாதா ரகம்- 60; சோம்பு- 170; வெந்தயம் -54; கசகசா - 320; சீரகம்- 210; கடுகு- 40; மிளகு -240 ரூபாய்.அரிசி விலை உயர்வு: 22க்கு விற்ற கல்சர் பொன்னி-24; 30 க்கு விற்ற டீலக்ஸ் பொன்னி- 32; 20க்கு விற்ற ஐ.ஆர்.,20- 21; 22 க்கு விற்ற செல்ல பொன்னி 24; 30 க்கு விற்ற பொன்னி பச்சரிசி- 33; பச்சரிசி- 22; 20 க்கு விற்ற இட்லி அரிசி- 22 ரூபாய்.எண்ணெய் விலை: 79க்கு விற்ற கடலை எண்ணெய்- 84; தேங்காய் எண்ணெய்- 80; நல்லெண்ணெய்- 90; 44 க்கு விற்ற பாமாயில்- 46 ரூபாய்.கடலை எண்ணெய் விலை உயர்வு, டிசம்பர் வரை நீடிக்கும் என்கின்றனர் வியாபாரி கள்.

## கி.புரத்தில் வாழை சாகுபடி பணி "ஜரூர்'

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2010,03:02 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் தாலுக்கா பகுதியில், மழை கைகொடுத்த மகிழ்ச்சியில் வாழை சாகுபடி வேகமடைந்துள்ளது.கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் மாயனூர், மணவாசி, கட்டளை, திருக்காம்புலியூர், கிருஷ்ணராயபுரம், லாலாப்பேட்டை, மகிளிப்பட்டி, பிள்ளப்பாளையம், கருப்பத்தூர், வல்லம், புதுப்பட்டி பகுதியில் 5,000 ஏக்கர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இப்பகுதிகளில் அதிகமாக கற்பூரவள்ளி, பூவன், ரஸ்தாலி, பச்சைவாழை, நேந்திரம் ஆகிய இனங்கள் பயிரிடப்படுகிறது. 10 முதல் 12 மாதம் வரை வளரக்கூடிய வாழை, ஒரு ஏக்கருக்கு 800 முதல் 1,000 வரை நடப்படுகிறது. பராமரிக்க இரண்டு மாதத்துக்கு பிறகு தேவையான தண்ணீர் வசதி தடைபடாமல் இருக்க, வாழை கன்றுக்கு அருகே கிடங்கு வெட்டப்படுகிறது. இயற்கை உரமாக மாட்டு சாணம் போடப்படுகிறது.வாழையில் குலைக்கும் பருவத்தில், காற்று மற்றும் மழையில் மரம் சரிந்துவிடாமல் இருக்க சவுக்கு குச்சி மூட்டு கொடுக்கும் பணி நடக்கிறது. வாழைக்குலை வளர்ந்து 40 நாள் வரை மரம் பாதுகாப்பாக நிற்க இது வசதியாகிறது.வாழை சாகுபடி தற்போ தைய நிலை குறித்து விவசாயி அன்பழகன் கூறியதாவது:வாழை சாகுபடி கிருஷ்ணராயபுரம் பகுதியில் அதிகமாக உள்ளது. ஆடி, ஆவ ணி மாதங்களில் காற்று மற்றும் மழை மட்டுமே பயத்தை ஏற்படுத்தும். தற்போது வாழையை பாதுகாக்க குச்சியை மூட்டு கொடுக்கும் பணி நடக்கிறது.தற்போது நடப்பட்டுள்ள வாழையில், வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வாழை தார் வெட்டப்படும். அனைத்தும் கோவை, நீலகிரி, திருச்சி மாவட்டங்களுக்கும், நேந்திரம் மட்டும் கேரளா, கர்நாடகாவுக்கும் விற்பனையாகிறது.தற்போதைய நிலையில் நல்ல வளர்ச்சி அடைந்த வா ழை தார் 120 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்பனையாகிறது. இதே விலை நீடித்தால், ஓரளவு விவசாயி நஷ்டம் அடையாமல் காப்பாற்றப்படுவார்கள்.இவ்வாறு அவர் கூறினார்.சீசன் காலங்களில் அதிக அளவில் உற்பத்தியாகும் வாழையை, பாதுகாக்க குளிர்பதன கிடங்கும், மதிப்பூட்டப்பட்ட பொருளாக மாற்றி வணிகப்படுத்த ஒரு ஆலையும், பிற்பட்ட பகுதியான கிருஷ்ணராயபுரம்பகுதியில் அமைய விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## உழவர் சந்தையில் காய்கறி விற்பனைதோட்டக்கலைத்துறையினர் அழைப்பு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2010,02:57 IST

கரூர்: ""உழவர் சந்தையில் காய்கறிகளை விற்பனை செய்து பயனடையலாம்,'' என ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி பயிற்சி முகாமில், தாந்தோணி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம் கூறினார்.உப்பிடமங்கலத்தில் நடந்த ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி பயிற்சி முகாமில் அவர் பேசியதாவது:கரூர் உழவர் சந்தைக்கு காய்கறிகளை கொண்டு வந்து இடைத்தரகர் இல்லாமல் மிகவும் அதிகபடியான லாபகரமான விலையில் காய்கறி விற்பனை

செய்து விவசாயிகள் பயனடைய வேண்டும்.மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அத்தியாவசியமான காய்கறியை அனைவரும் போதுமான அளவு உணவில் தினசரி சேர்த்து கொள்ள வேண்டும். குறைந்த காலத்தில் கூடுதல் லாபம் பெற காய்கறிகளை விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும்.ஆடிப்பட்டத்தில் காய்கறி சாகுபடி செய்வதை ஊக்கவிக்கும் பொருட்டு தாந்தோணி வட்டாரத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.இவ்வாறு கிராமம் தோறும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களால் நடத்தப்படும் ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி பயிற்சி முகாமில் கலந்து கொளும் விவசாயிகளுக்கு பல்வேறு வகை காய்கறி சாகுபடி குறித்து புதிய தொழில்நுட்பம் குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும், மத்திய மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு மானியத்திட்டம் குறித்து விளக்கம் அளிக்கப்படும்.இவ்வாறு அவர் பேசினார்.உப்பிடமங்கலம், லட்சுமணப்பட்டி, லிங்கத்தூர், பொரணி, பாலம்பாள்புரம்,சின்னகவுண்டன்புதூர், ராசாகவுண்டனூர் உள்ளிட்ட கிராம விவசாயிகள் பங்கேற்றனர்.

**விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2010,22:47 IST

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வரும் 27ல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் காலை 10 மணிக்கு நடக்கிறது. அன்றைய கூட்டத்தில் கடந்த மாதம் 30ம் தேதி கொடுக்கப்பட்ட மனுக் கள், கோரிக்கை மீது விவாதிக்கப்படும். இதில் அனைத்து துறை அதிகாரி களும் பங்கேற்று விவசாயி கள் பிரச்னைக்கு தீர்வு காண்பார்கள்.

**பருத்தி ஏற்றுமதிக்கு 2011 வரை தடை விதிக்க வேண்டும் : திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் கடிதம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 19,2010,03:13 IST

திருப்பூர் : "பருத்தி ஏற்றுமதிக்கு 2011 ஜன., 15 வரை தடை விதிக்க வேண்டும்,' என திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் சக்திவேல், மத்திய வணிகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மாவுக்கு அனுப்பியுள்ள கடிதம்: அதிகளவில் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியதால், ஓராண்டாக பின்னலாடை வர்த்தகம் நெருக்கடியில் உள்ளது. இந்நிலையில், வணிகத்துறை அமைச்சக, வெளிநாட்டு வர்த்தக பொது இயக்குனரகம்(டி.ஜி.எப்.டி.,) "ஓபன் ஜெனரல் லைசென்ஸ் (ஓ.ஜி.எல்.,)' என்ற ஏற்றுமதி கொள்கை அடிப்படையில் அக்., 1 முதல் பருத்தி ஏற்றுமதி செய்து கொள்ளலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ பஞ்சை ஏற்றுமதி செய்தால், 75 ரூபாய் கிடைக்கிறது. ஒரு கிலோ பஞ்சில் இருந்து பனியன் ஆடைகளை தயாரித்து அனுப்பினால், 750 ரூபாய் கிடைக்கும். இதன் மூலம் அதிக அன்னிய செலாவணி கிடைப்பதுடன், பலருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

பருத்தியை விளைவித்த விவசாயிகளுக்கு வருவாய் கிடைப்பதில்லை. அவற்றை வாங்கி விற்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் மட்டுமே லாபம் பெறுகின்றன. விலை உயர்வுக்காக பருத்தியை வாங்கி பதுக்கி வைத்து, உள்நாட்டு சந்தையில் செயற்கையான விலை உயர்வை ஏற்படுத்தியும் சில நிறுவனங்கள் சம்பாதிக்கின்றன.
கடந்த 2009 ஆக., 1ம் தேதி, 40ம் நம்பர் காட்டன் ஒசைரி நூல் கிலோ 139 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கடந்த மே இறுதியில், கிலோ 202 ரூபாயாக உயர்ந்தது. நூல் விலை உயர்வால் ஜவுளித்தொழில் ஆட்டம் கண்டதால், பேச்சு மூலமாக விலை குறைப்பு செய்யப்பட்டது. அதனால், 40ம் நம்பர் நூல் கிலோ 185 ரூபாய்க்கு விற்பனையாகிறது.
பருத்திக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை கடுமையாக உயர்ந்ததால், காட்டன் ஒசைரி நூல் விலையும் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்தது. இதனால்,திருப்பூருக்கு கிடைக்க வேண்டிய பனியன் ஆர்டர்கள், வேறு நாடுகளுக்கு சென்று விட்டன. "பையர்'கள் ஒருமுறை வெளியே சென்று விட்டால், மீண்டும் அவர்களை நம்மிடம் வரவழைப்பது என்பது இயலாத காரியம். காட்டன் ஒசைரி நூல் விலை நிலையாக இல்லாததால், திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் நம்பிக்கையுடன் ஆர்டர் எடுக்க முடியவில்லை. எடுத்த ஆர்டர்களும் நஷ்டத்தையே சந்தித்துள்ளன. அரசு தரப்பில் தேவையான சலுகைகள், பாதுகாப்பு இல்லாததால் பின்னலாடை தொழில் நசிவை நாடிச்செல்கிறது. இந்நிலையில், அக்., 1ம் தேதி முதல் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியுள்ளது பேராபத்தை உருவாக்கும்.
எனவே, கடந்த மூன்றாண்டு நடைமுறை அடிப்படையில் பார்க்கும்போது, பருத்தி ஏற்றுமதியை ஒத்திவைக்க வேண்டும். அக்., மாதத்தில் இருந்து ஏற்றுமதி செய்யாமல், 2011 ஜன., மாதத்தில் இருந்து பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதிக்க வேண்டும். அதுவரை, இரண்டரை மாத காலத்தில் அறுவடையாகும் பருத்தியை தொடர்ந்து இருப்பு வைக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் ஐந்து முதல் ஆறு லட்சம் பேல் வரையிலான பருத்தி மட்டுமே ஏற்றுமதிக்கு அனுமதிக்க வேண்டும்.
92 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள ஏற்றுமதி ஜவுளி வர்த்தகம் மற்றும் லட்சகணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அக்., 1ம் தேதி முதல் பருத்தி ஏற்றுமதி செய்ய அனுமதிக்கக்கூடாது. தேவை ஏற்படும் பட்சத்தில், 2011ம் ஆண்டு ஜன., 15ம் தேதியில் இருந்து கட்டுப்பாடுகளுடன், பருத்தி ஏற்றுமதி செய்ய அனுமதிக்கலாம். இவ்வாறு, கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.
**பிரதமருக்கு "சைமா' கடிதம் :** திருப்பூர் "சைமா' சங்க தலைவர் ஈஸ்வரன், பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அனுப்பியுள்ள கடிதம்: பருத்தி விளைச்சல் எவ்வளவு இருக்கும் என்பதை கணக்கிடாமல், உள்நாட்டு தேவை எவ்வளவு என்பதை சிந்திக்காமல், ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கக் கூடாது. அவ்வாறு செய் வதால், கைத்தறி, விசைத் தறி மற்றும் பின்னலாடை வர்த்தகமும், தொழிலாளர் களும் பாதிக்கப்படுவர். எனவே, உள்நாட்டு தேவை போக, மீதியுள்ள பருத்தி மற்றும் நூலை மட்டுமே ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு, அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கடந்த ஆண்டு பெய்த கனமழையில் சேதம் அடைந்த பயிர்களுக்கு நிவாரணம் வழங்க கோரிக்கை

பந்தலூர், ஆக.19–
கடந்த ஆண்டு பெய்த கனமழையில் சேதம் அடைந்த பயிர்களுக்கு உரிய நிவாரண தொகை வழங்கப்பட வில்லை என சேரங்கோடு கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் வலியுறுத்தினர்.

கிராம சபை கூட்டம்

பந்தலூர் தாலுகா கையுன்னி அரசு தொடக்கப்பள்ளியில் சேரங்கோடு ஊராட்சியின் கிராம சபை கூட்டம் நடை பெற்றது. துணை தலைவர் தங்கவேல் தலைமை தாங்கி னார். கூடலூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் சரவணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் வேலு, வருவாய் ஆய்வாளர் சங்கரநாராயணன், கிராம நிர்வாக அலுவலர்கள் தனராஜ், குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி உதவியாளர் சஜித் வரவேற்றார். கூட்டத்தில் கடந்த வருட மழையின் போது பல வீடுகள் சேதம் அடைந்தன. பயிர்கள் நீரில் முழ்கின. ஆனால் கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதிகளில் இடிந்த வீடுகளோ, நடைபாதைகளோ சீரமைக்கப்பட வில்லை.மழையில் சேதமான பயிர் களுக்கு உரிய நிவாரண நிதி விவசாயிகளுக்கு வழங்கப்பட வில்லை என பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். இதை யொட்டி கூடலூர் ஊராட்சி ஆணையாளர் சரவணன் கூறும் போது, வெள்ள நிவாரண நிதி ரூ.540 கோடி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு ஊட்டி, குன்னூர், கோத்தகிரி ஆகிய பகுதிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. ஆனால் கூட லூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு இதுவரை நிதி வந்து சேர வில்லை என்று கூறினார்.

தொடர்ந்து பொதுமக்கள் எருமாடு, திருமங்களம் ஆதிவாசி காலனி பகுதியில் குடிநீர் கிணறு தூர்வாரப்பட வில்லை. இதனால் குடிநீர் மாசடைந்து காணப்படுகிறது. இதேபோல் கோட்டூர் யானை கட்டி பகுதியில் குடிநீர் கிணறு அமைக்கப்பட்டது. ஆனால் குழாய் வசதியோ, மின்சார வசதியோ செய்து தரப்பட வில்லை என்றும், அய்யங் கொல்லி பகுதியில் தெரு விளக்குகள் எரியாமல் கிடப்ப தாக பொதுமக்கள் புகார் தெரிவித்தனர்.

டாக்டர்களை நியமிக்க கோரிக்கை

பூதமூலா பகுதியில் இருந்து வெள்ளாளங்குன்னு ஆதிவாசி காலனிக்கு செல்லும் சாலையை சீரமைக்க வேண் டும் என பொதுமக்கள் வலி யுறுத்தினர். இதேபோல் சேரம் பாடி ஆரம்ப சுகாதார நிலை யத்தில் போதிய டாக்டர்களை நியமனம் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

மாவட்ட நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல் லப்பட்டு நடவடிக்கை எடுக் கப்படும் என ஊராட்சி துணை தலைவர் தங்கவேல் உறுதி அளித்தார். கூட்டத்தில் தோட்டக்கலை துறை உதவி அலுவலர் சுப்பன், கவுன் சிலர்கள் சந்திரசேகர், அசோக் குமார், சுகுமாறன், ராஜேந்திர பிரசாத், ஏலியம்மா, யூனியன் கவுன்சிலர் வர்க்கிஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# இவ்வாண்டு க ப் மற்றும் ரபி வேளாண் பருவங்களில் இந்தியாவின் நெல் உற்பத்தி 10 கோடி டன்னாக அதிகரிக்கும்



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் (கரீஃப் + ரபி), நாட்டின் நெல் உற்பத்தி 10 கோடி டன்னை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, நம் நாட்டில் நெல் உற்பத்தி பருவம் என்பது ஜூலை முதல் ஜூன் வரையில் கணக்கிடப்படுகிறது. இவ்வகையில், நடப்பு பருவத்தில், பல மாநிலங்களில் நெல் சாகுபடி சிறப்பாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*
*இரண்டாவது இடம்*
*உலக அளவில் நெல் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நாட்டின் ஒரு சில கிழக்கு மாநிலங்களில் வறட்சி நிலை உள்ளது என்றாலும், ஒட்டுமொத்த அளவில், நெல் சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது என இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் பிரசிடென்ட் விஜய் சேத்தியா தெரிவித்தார்.*
*சென்ற 2009–10–ஆம் ஆண்டில், நாட்டின் நெல் உற்பத்தி 8.93 கோடி டன்னாக இருந்தது. இது, இதற்கும் முந்தைய ஆண்டில் 9.92 கோடி டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*
*கர்நாடக மாநிலத்தின் பல மாவட்டங்களில் அதிக மகசூல் தரக்கூடிய உயர் வகை விதை நெல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாண்டில், கர்நாடக மாநிலத்தின் நெல் சாகுபடி அமோகமாக இருக்கும் என சேத்தியா கூறினார்.*
*அரிசி ஏற்றுமதி*
*நடப்பு ஆண்டில், நெல் உற்பத்தி மத்திய அரசின் மதிப்பீட்டை ஒட்டி அதிகரிக்கும் நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக அரிசி ஏற்றுமதி மீதான தடை படிப்படியாக விலக்கிக் கொள்ள வாய்ப்பு இருப்பதாகவும் சந்தை வட்டாரத்தினர் தெரிவித்தனர். மேலும், சர்வதேச அளவில் அரிசிக்கான தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. குறிப்பாக, இவ்வாண்டு பாகிஸ்தான் நாட்டில், நெல் விளையும் பெரும்பாலான மாநிலங்களில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் அந்நாட்டின் அரிசி உற்பத்தி பாதிப்புக்குள்ளாகும் என்ற நிலைப்பாடும் உள்ளது.*
*2.74 கோடி ஹெக்டேர்*
*இவ்வாண்டு ஆகஸ்டு 13–ந் தேதி நிலவரப்படி, நம் நாட்டில் 2.74 கோடி ஹெக்டேரில்*

*நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டு 2.51 கோடி ஹெக்டேராக இருந்தது என மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நாட்டில் அதிக அளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும் 19 மாநிலங்களில், 16 மாநிலங்களில் சாகுபடி நன்றாக உள்ளது என அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதேசமயம், பீகார் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையால், இவ்வாண்டு அம்மாநிலத்தில் நெல் உற்பத்தி குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில், நெல் சாகுபடி நிலவரம் திருப்திகரமாக உள்ளது.*

## முதல்–அமைச்சர் அறிவித்த திட்டத்தில் விவசாயிகளுக்கு, 15 லட்சம் மோட்டார் பம்பு செட்டுகள் தேவை கோவை பகுதியில் இருந்து கொள்முதல் செய்ய சீமா சங்கம் எதிர்பார்ப்பு

*கோவை, ஆக.19–*

*முதல்–அமைச்சர் அறிவித்த திட்டத்தில், விவசாயிகளுக்கு 15 லட்சம் மோட்டார் பம்பு செட்டுகள் தேவைப்படுகிறது. இதை கோவைபகுதி உற்பத்தியாளர்களிடம் இருந்து தமிழகஅரசு பெற வேண்டும் என்று சீமா சங்கம் வலியுறுத்தி உள்ளது.*

*தென்னிந்திய பொறியியல் உற்பத்தியாளர்கள் சங்கம் (சீமா) தலைவர் ஆர்.ஆர்.ரங்கநாதன் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–*

*வரவேற்பு*

*சுதந்திர தின விழாவின் போது, தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதி சிறு, மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு அவர்கள் பயன்படுத்தும் பழைய மோட்டார் பம்பு செட்டுகளுக்கு பதிலாக புதிய மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றித்தந்து அதன் மூலம் மின்சார சேமிப்புக்கு வழிவகை செய்ய ஏற்பாடு செய்வதை சீமா வரவேற்கிறது. சீமா குறிப்பாக தென்னிந்திய பம்பு செட் உற்பத்தியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்திய பம்பு செட்டு தேவையில் சுமார் 45 சதவீதம் கோவை பம்பு செட் உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்படுகிறது. தரமான பம்பு செட்டுகளை தயாரிப்பதிலும் தங்கள் உற்பத்தி மூலம் 60 சதவீதத்துக்கும் மேலாக தரச்சான்றிதழ் பெற்றும், கோவை முதல் இடத்தை வகிக்கிறது. இந்த அறிவிப்பு தமிழக பம்பு செட்டு உற்பத்தியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது.*

*கொள்முதல் விலை*

*முதல்–அமைச்சர் அறிவித்த இந்த திட்டத்தின் கீழ் 3 மற்றும் 5 குதிரை திறன் கொண்ட மோட்டார் பம்பு செட்டுகளும், சப்மெர்சிபிள் பம்பு செட்டுகளும் தவிர ஆழ் குழாய் கிணற்று உபயோகத்துக்கான சப்மெர்சிபிள் மோட்டார் பம்பு செட்டுகளும் அடங்கும். கோவை பகுதியில் ஒரு மாதத்தின் மொத்த விவசாய பம்பு செட் உற்பத்தி 75 ஆயிரம் முதல் 1 லட்சம் பம்பு செட்டுகள் வரை இதில் அடங்கும்.*

*இந்த பம்பு செட்டுகளின் விலை அதன் வகை, மற்றும் குதிரை திறனுக்கு ஏற்ப ரூ.20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரைஇருக்கும். அதன் உதிரி பாகங்களுக்கு அவற்றின் களத் தேவைக்கு ஏற்றவாறு விலை இருக்கும்.*

*இந்த திட்டத்துக்கு 12 லட்சம் முதல் 15 லட்சம் மோட்டார் பம்பு செட்டுகள் வரை தேவைப்படும். இவற்றை உற்பத்தி செய்ய குறைந்த பட்சம் 2 முதல் 3 ஆண்டுகள் வரை ஆகும். தமிழக அரசு இந்த திட்டத்தை ஒரே ஆண்டில் நடைமுறைப்படுத்த விரும்பினால் அதற்காக ரூ.150 கோடி முதலீடுதேவைப்படும். இது பலவித உற்பத்தி நிறுவனங்களின் மூலமாகவும் 4 மாத கால அவகாசத்திலும் சாத்தியமாகும்.*

*விற்பனைவிலை சலுகை*

*இதன் மூலம் மோட்டார் பம்பு செட்டுகளின் செயல்திறன் மற்றும் களத்தன்மையின் அடிப்படையில் மின்சேமிப்பு குறைந்த பட்சம் 20 சதவீதத்தில் இருந்து அதிக பட்சமாக 35 சதவீதம் இருக்கும்.*

*கோவை பம்பு செட் உற்பத்தியாளர்கள் தரமான பம்பு செட்டுகளை உற்பத்தி செய்து வருகின்றனர். பி.ஐ.எஸ். குறியீடு பெற்ற பம்பு செட்டுகளில் 65 சதவீதத்துக்கும் அதிகமான அதாவது 300–க்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்கள் பி.ஐ.எஸ். தரச்சான்றிதழ் பெற்றவர்கள் ஆவர்.*

*ஆகவே தமிழக அரசு மொத்த பம்பு செட் கொள்முதலையும் கோவை பகுதியில் இருந்து பெறும் என எதிர்பார்க்கிறோம். விற்பனை விலைக்கான சலுகை குறித்து சீமா உறுப்பினர்களிடம் ஆய்வு செய்ய உள்ளோம்.*

*இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.*

### நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில்

# பொதுத் துறை வங்கிகள் வழங்கிய வேளாண் கடன் ரூ.35,184 கோடி

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) பொதுத் துறை வங்கிகள் வழங்கிய வேளாண் கடன் ரூ.35,184.22 என மத்திய நிதி அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

## வணிக வங்கிகள்

முதல் காலாண்டில் வழங்கப்பட்ட மொத்த விவசாய கடனில் ரூ.14,190.21கோடியை வணிக வங்கிகள் வழங்கியுள்ளன. கூட்டுறவு வங்கிகள் ரூ.13,748.22 கோடியும், மண்டல ஊரக வங்கிகள் ரூ.7,245.79 கோடியும் வழங்கியுள்ளன.



நடப்பு நிதி ஆண்டுக்கு வேளாண் துறைக்கு ரூ.3.75 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் பொதுத் துறை வங்கிகளின் பங்களிப்பு ரூ.2.80 லட்சம் கோடியாகவும், கூட்டுறவு வங்கிகளின் பங்களிப்பு ரூ.55,000 கோடியாகவும் இருக்கும். மண்டல ஊரக வங்கிகள் ரூ.40,000 கோடி வழங்க வேண்டியிருக்கும்.

சென்ற நிதி ஆண்டில் வேளாண் கடன் இலக்கு ரூ.3.25 லட்சம் கோடியாக இருந்தது. கடந்த சில ஆண்டுகளாக, மத்திய அரசு நிர்ணயித்த அளவில் வேளாண் கடன் இலக்குகளை வங்கிகள் வெற்றிகரமாக அடைந்து வருகின்றன.

## ஐந்தாண்டு திட்டங்கள்

நடப்பு பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–2012), நம் நாட்டில் வேளாண் துறை 3 முதல் 3.5 சதவீதம் வரை வளர்ச்சி அடையும் என மத்திய திட்டக் குழு மதிப்பீடு செய்துள்ளது. முன்னர், 4 சதவீத வளர்ச்சியை எட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. முந்தைய மதிப்பீட்டை காட்டிலும் வளர்ச்சி விகிதம் சற்று குறையும் என்ற நிலைப்பாடு உள்ள போதிலும், பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தைக் காட்டிலும், வளர்ச்சி விகிதம் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில், விவசாய துறையின் வளர்ச்சி 3–3.5 சதவீத அளவிற்கே இருக்கும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில், வரும் பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–2017) 4 சதவீத வளர்ச்சியை அடையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மத்திய திட்டக் குழு வலியுறுத்தியுள்ளது.

**நீலகிரி மாவட்டத்தில்**

# ரம்பூட்டான், பெர்சிமன் பழ சீசன்

ஊட்டி, ஆக.19–

நீலகிரி மாவட்டத்தில் தற்போது ரம்பூட்டான், பெர்சிமன் பழ சீசன் நிலவுகிறது.

## பழங்கள்

மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் நீலகிரி மாவட்டத்தில் மங்குஸ்தான், துரியன், ரம்பூட்டான், பெர்சிமன், ஊட்டி ஆப்பிள், பப்ளிமாஸ் போன்ற பல்வேறு பழங்கள் அந்தந்த சீசன் காலங்களில் விளைகின்றன. இவைகள் ஊட்டி, குன்னூர் மற்றும் மேட்டுப்பாளையம் மார்க்கெட்டுகளில் விற்பனைக்கு வருகின்றன.

நீலகிரியில் அரிய வகை பழங்களான ரம்பூட்டான், பெர்சிமன் சீசன் தற்போது நிலவுகிறது. இதனால் குன்னூர், பர்லியார், கல்லார் பகுதியில் அரசு தோட்டக்கலை பண்ணை, சில தனியார் தோட்டங்களில் உள்ள மரங்களில் பழங்கள் காய்த்துள்ளன.

## மார்க்கெட்டில் விற்பனை

இவைகள் தற்போது ஊட்டியில் மார்க்கெட் பகுதியில் உள்ள கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளது. இது குறித்து ஊட்டி மார்க்கெட் என்.எஸ்.எச். பழ வியாபாரி ஷேக் தாவூத் 'தினத்தந்தி' நிருபரிடம் கூறியதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் தற்போது ரம்பூட்டான், பெர்சிமன் பழ சீசன் நிலவுகிறது. குன்னூர், பர்லியார், கல்லார் பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

மலைப்பகுதியில் விளையும் பழங்களுக்கு உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகளும் விரும்பி வாங்கி சுவைக்கின்றனர். இதில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் இங்கு விளையும் பழங்களை அதிகம் விரும்பி சாப்பிடுகின்றனர்.

## ரம்பூட்டான் ரூ.150

மேலும் தற்போது ரம்பூட்டான் பழம் விற்பனைக்கு வந்து உள்ளது. இந்த பழம் சிவப்பு நிறத்தில், தோல் பகுதியில் முள் போன்று காணப்படும். மிகவும் சுவையான இந்த பழம் ஒரு கிலோ ரூ.150–க்கு தற்போது விற்பனை செய்கிறோம்.

அதே போன்று பெர்சிமன் பழமும் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வந்துள்ளது. இந்த பழம் கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக ஊட்டி தோட்டக்கலை உதவி இயக்குனர் பிரகாசம் கூறியதாவது:–

## குளிர்ச்சி தரக்கூடிய பழம்

மித வெப்ப சீதோஷ்ண பகுதியான குன்னூர், பர்லியார், கல்லார் பகுதியில் ரம்பூட்டான் மற்றும் பெர்சிமன் பழங்கள் விளைகிறது. இந்த பழவகையில் பொதுவாக வைட்டமின் 'சி' அதிகம் உள்ளது. ரம்பூட்டான் பழம் உடலுக்கு உஷ்ணத்தை கொடுக்கும் தன்மை கொண்டது.

பெர்சிமன் பழம் ஜப்பான் நாட்டின் தேசிய பழ வகை ஆகும். இது உடலுக்கு அதிக குளிர்ச்சி தரக்கூடியது. வைட்டமின் 'சி' அதிகமாக உள்ளது. இந்த பழ வகைகள் மலை பிரதேசத்தில் மட்டும் கிடைக்க கூடியது என்பதால் ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் அதிகம் விரும்புகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.



ஊட்டி மார்க்கெட்டில் விற்பனைக்காக தொங்க விடப்பட்டுள்ள பெர்சிமன் பழங்கள்.



விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ரம்பூட்டான் பழங்கள்.

# வேளாண்மை செய்திகள்

மருத்துவ குணம் கொண்ட

## யூகலிப்டஸ் மரங்கள் வளர்ப்பு முறை



யூகலிப்டஸ் என்று அழைக்கப்படும் தைலமரத்தின் சிட்ரியோடோரா வகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் இலைகள் எலுமிச்சை வாசனை கொண்டது. இதனால் இவை எலுமிச்சை வாசனை கோந்து அல்லது எலுமிச்சை புல் வாசனை கோந்து என்று அழைக்கப்படுகிறது. இந்த வகை யூகலிப்டஸ் மரங்கள் தென் இந்தியாவில் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. இவை 24 முதல் 50 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியவை.

### யூகலிப்டஸ் மரங்கள்

யூகலிப்டஸ் மரங்களில் இருந்து மருத்துவ குணமுடைய எண்ணெய் மற்றும் வாசனை எண்ணெய்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்த மருந்துகள் தலைவலி, நரம்பு ஆகியவற்றில் உண்டாகும் வலியை போக்க பயன்படுகிறது. மருத்துவ பயன்பாட்டுக்காக அதிக அளவில் பயன்படுத்துவதால் ஆண்டுக்கு 55 டன் யூகலிப்டஸ் எண்ணெய் தேவைப்படுகிறது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நல்ல வடிகால் வசதியுடன் அதிக அளவு இயற்கை வேளாண் பொருட்கள் நிறைந்த மண் வகையில் யூகலிப்டஸ் மரங்கள் நன்றாக வளரும். உயரமான மலைச்சரிவுகள், கடல் மட்டத்தில் இருந்து 1500 மீட்டர் முதல் 2000 மீட்டர் வரை உயரமுள்ள மலைப்பகுதிகள், ஆண்டு மழையளவு 200 முதல் 300 சென்டி மீட்டர் உள்ள பகுதிகளிலும் யூகலிப்டஸ் மரங்களை வளர்க்கலாம்.

### வளர்ப்பு முறை

அவ்வாறு வளர்க்கும் போது நாற்றுகளின் வேர்கள் பிரித்து நடும்போது வளர்ச்சி பாதிக்கும். எனவே விதைகளை 22×6 சென்டி மீட்டர் அளவுள்ள பாலிதீன் பைகளில் நேரடியாக விதைத்து, நன்றாக சலித்த மண் கொண்டு நிரப்பி 2 விதைகள் வீதம் விதைக்க வேண்டும். பைகளில் அடியில் அதிகமான நீர் வெளியே செல்லும்படி துளைகள் ஏற்படுத்த வேண்டும். நாற்றங்காலுக்குள் நிழல் இருக்க வேண்டும்.

விதைகள் 15 நாட்களில் முளைத்துவிடும். பின்னர் 2 முதல் 3½ மாதங்களில் நாற்றுகள் 5 அல்லது 6 இலைகள் வந்தவுடன் நடவு செய்ய வேண்டும். ஜனவரி–பிப்ரவரி மாதங்களில் விதைகளை விதைத்து, செடி வளர தொடங்கியவுடன் ஜூன்–ஜூலை மாதங்களில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்வதற்கு முன் நிலத்தை நன்றாக உழுது 30×30×45 சென்டி மீட்டர் அளவுள்ள குழிகளை வெட்டி, யூகலிப்டஸ் செடிகளின் அடிப்பகுதியில் உள்ள மண் கலையாமல் நட வேண்டும்.

### அதிக மகசூல்

தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவற்றின் அளவு 25:40:40 என்ற விகிதத்தில் உள்ள உரக்கலவையை ஒவ்வொரு ஆண்டும் பருவமழை முடியும் காலங்களில் செடிகளில் தெளிக்க வேண்டும். இதில் பூச்சி, நோய் தாக்குதல் அதிகம் கிடையாது. எனவே செடிகளை நடவு செய்த 3–வது ஆண்டில் இருந்து சிறு சிறு கிளை தண்டுகளை அறுவடை செய்யலாம்.

4–வது ஆண்டில் இருந்து 1 மீட்டர் உயரம் விட்டு எல்லா இலைகளையும் வெட்டிவிட வேண்டும். இவ்வாறு செய்யும் போது வரும் காலங்களில் செடிகளின் பக்க கிளைகள் நன்றாக வளர்ந்து அதிக மகசூல் கிடைக்கும். வளமான நிலத்தில் விளையும் யூகலிப்டஸ் மரங்களில் இருந்து 200 முதல் 250 கிலோ வரை எண்ணெய் கிடைக்கும்.

## நெல்லுக்கு அடியுரமாக பயன்படும் கோழி எரு



விவசாய பயிர்களின் நன்றாக செழித்து வளர்வதற்கு 16 வகையான சத்துகள் மிகவும் அவசியம். இந்த சத்துகள் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சத்துகள் என வகைபடுத்தப்பட்டு உள்ளன. முதல் நிலை சத்துகளில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துகள் அடங்கி உள்ளன. இரண்டாம் நிலை சத்துகளில் கால்சியம், கந்தகம், போரான், துத்தநாகம், இரும்பு, மாங்கனீசு போன்ற நுண்ணூட்டச்சத்துகள் அடங்கி உள்ளன. பெரும்பாலான விவசாயிகள் முதல்நிலை சத்துகளை மட்டுமே பயிர்களுக்கு அளிக்கின்றனர். அவ்வாறு இடும்போது பயிர்களுக்கு குறிப்பிட்ட ஒரு சத்து மட்டுமே கிடைக்கும். இது தவிர மண்ணில் உள்ள மண்புழு, நன்மை தரும் பாக்டீரியாக்கள், பூஞ்சாணம் போன்ற உயிரிணங்கள் வளர்ச்சி தடைபடும். காலப்போக்கில் மண்ணின் உற்பத்தி திறனும் குறைந்து விடுகிறது. இவற்றை சரி செய்வதற்கு ரசாயன உரங்களோடு இயற்கை உரங்களான கோழி எருவையும் சேர்த்து விவசாயம் செய்வதன் மூலம் நிலையான விளைச்சலை பெற முடியும்.

### கோழி உரம்

நமது நாட்டில் கோழிப் பண்ணைகளில் இருந்து ஒரு வருடத்தில் கிடைக்க கூடிய கோழி உரத்தின் அளவு 6 மில்லியன் டன்னில் இருந்து 8 மில்லியன் டன்களாகும். கோழி எரு உரத்தை சரியான முறையில் பயன்படுத்தும் போது கிட்டத்தட்ட 3 மில்லியன் எக்டேர் பரப்பளவுக்கு தேவையான உர அளவை பூர்த்தி செய்ய முடியும். கோழி எருவினை தனியாக கம்போஸ்ட் செய்ய வேண்டியதில்லை. உடனடியாக நிலங்களுக்கு பயன்படுத்தலாம். எந்தவித தீங்கும் விளைவிப்பதில்லை. கோழி எருவில் குப்பை எருவை காட்டிலும் சத்துகள் அதிகமாக உள்ளன. பொதுவாக குப்பை எருவில் 2 சதம் தழைச்சத்து, 1 சதம் மணி மற்றும் சாம்பல் சத்து அடங்கி உள்ளது.

ஆனால் கோழி எருவில் 1.6 சதம் தழைச்சத்து, 2 சதம் மணிச்சத்து, 2 சதம் சாம்பல் சத்து அடங்கி உள்ளதால் மற்ற இயற்கை எருவை காட்டிலும் கோழி எரு சத்துள்ள எருவாகும். இதை போல் கோழி எருவில் சுண்ணாம்பு, மக்னீசியம் சத்தும் அதிக அளவில் இருக்கிறது. உலர்ந்த ஒரு டன் கோழி எருவினை நிலத்தில் இடும் போது 100 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 50 கிலோ பொட்டாஷ், 125 கிலோ கால்சியம் சல்பேட், 30 கிலோ துத்தநாகம், மற்றும் பிறநுண்ணூட்ட சத்துகள் அடங்கி உள்ளன.

### சுண்ணாம்பு சத்து

கோழி எருவில் 25 முதல் 30 கிலோ சுண்ணாம்பு சத்து இருப்பதால் அமிலத்தன்மை உள்ள செம்மண் நிலங்களும் செம்மண் பாறை நிலங்களும் ஏற்றது. களர், உவர் நிலங்களில் மணிச்சத்தின் அளவு அதிகமாக இருப்பதால் பயிர்களுக்கு எளிதாக சுண்ணாம்பு சத்து கிடைக்கிறது. மேலும் கோழி எருவில் கரிமப் பொருள் அதிகமாக இருப்பதால் மண்ணில் பொலபொல தன்மையை ஏற்படுத்தி காற்றோட்டம் மற்றும் ஈரத்தன்மையை அதிகரிக்க உதவுகிறது.

### நெல்லுக்கு அடியுரம்

கோழி எருவினை அனைத்து பயிர்களுக்கும் அளிக்கலாம். ஒரு டன் கோழி எருவில் சுமார் 16 கிலோ தழைச்சத்து, 20 கிலோ மணிச்சத்து, மற்றும் 20 கிலோ சாம்பல் சத்து இருப்பதால் நெல்லுக்கு அடியுரமாக ஏக்கருக்கு 1 டன் கோழி எருவுடன் 10 கிலோ யூரியா இடுவது மிகவும் சிறந்ததாகும். மணிச்சத்து அதிகமாக தேவைப்படும் உளுந்து போன்ற பயிறுவகை பயிர்களுக்கும், எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலைக்கு மிகவும் ஏற்றதாகும். மா மற்றும் தென்னை மரங்களுக்கு ஏக்கருக்கு 1.6 டன் கோழி எருவும், மல்லிகை தோட்டத்துக்கு ஏக்கருக்கு 400 கிலோ, ரோஜா தோட்டத்துக்கு 150 முதல் 200 கிலோ வரை கோழி எருவை பயன்படுத்தலாம்.

தகவல்:–எ.கபீர், வேளாண்மை ஆலோசகர், வேளாண் நிலையம், தாராபுரம்.

## கழிவு நீரை தூய்மையாக்கும் அசோலா தாவரம்



அசோலா என்பது நீரில் மிதந்து வாழக்கூடிய பெரணி தாவர வகையாகும். இதை தமிழில் மூக்குத்தி, கம்மல் செடி என்றும் அழைப்பது உண்டு. இந்த தாவரம் சிறிய இலைகளையும், துல்லியமான வேர்களையும் கொண்டது. பச்சை அல்லது லேசான பழுப்பு நிறத்தில் காணப்படும் இதன் தண்டு, வேர்ப்பகுதிகள் நீரினுள் மூழ்கியே இருக்கும்.

கழிவு நீரில் உள்ள முக்கிய ஊட்டச்சத்துக்களான நைட்ரஜன், பாஸ்பரஸ் ஆகியவற்றால் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுகின்றன. இதனால் கழிவு நீரை சுத்தப்படுத்த அதிக அளவு ஊட்டச்சத்துக்களை வெளியேற்றுவது அவசியம். நைட்ரஜன், பாஸ்பரஸ் போன்றவற்றை கழிவு நீரில் இருந்து வெளியேற்றுவதற்கு நீர்வாழ் தாவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அந்தவகையில், அசோலா தாவரத்தில் தழைச்சத்தை நிலை நிறுத்தும் திறன் உள்ளதால், கழிவு நீரில் உள்ள நைட்ரஜனை எடுத்துக்கொண்டு பாஸ்பரசை வெளியேற்றுகிறது. இதனால் அசோலா தாவரம் இரட்டிப்பு அடைந்து கழிவு நீரில் உள்ள ஊட்டச்சத்து பொருட்களை அதிக அளவில் வெளியேற்றுகிறது. கழிவு நீரை சுத்தப்படுத்துவதற்காகவே அசோலா தாவரம் அதிக அளவில் கழிவுநீரில் வளர்க்கப்படுகிறது. அறுவடை செய்த அசோலா தாவரத்தை நெல்லுக்கு பசும் உரமாகவும் பயன்படுத்தலாம்.

–தகவல்: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோவை.